# மனம் பொறுக்காதே!



இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்

பெங்களூர், இந்தியா

ஜீவலோகமாய் உருவான பூமியை, மரண சொர்க்கமாய்

மாற்றியவர்கள், சாத்தானும் அவனது தூதர்களும்;

தேவனாக மாற பேராசைப்பட்டவன் சாத்தான்-அது

தேவ லோகத்திலே நடக்காது என்று அறிந்ததும்,

தேவப்பிள்ளைகளாம் ஆதாம், ஏவாளிடம் வந்து

ஏமாற்றினான்;

பாவம் கீழ்ப்படியாமையின் ரூபத்தில், மனித வாழ்க்கையில்

அரங்கேற்றமாக, சத்துரு தனது இருளின் இராஜ்ஜியத்தை

கட்டத்தொடங்கினான்;

நன்மையாய் (தேவதூதனாய்) உருவானவன், தீமையாய்

(கடவுளின் எதிரியாய்) மாறியதால்,

நன்மை-தீமை கனியை ஏதேனில் வைத்தார் இறைவன்.

தேவன் மனுஷரை தமது சாயலில் படைத்திருந்தார்;

சத்துருவோ, அவர்களை மிருகமாக்கினான்;

எப்படி?

மிருகத்தின் சாயலில் வந்து, பாவத்தை (அநீதியை)

விதைத்தான் அவர்கள் உள்ளத்திலே, பாவமான அவன்;

பாவம் (அசுத்தம்) பெருகின மனித உள்ளம்,

தேவனைத்தேடியது, பரிசுத்தத்தை நாடியது;

அந்தோ பரிதாபம்!

பரிசுத்த தேவனால், பாவத்தை மன்னிக்க,

மறக்கத்தான் முடியும்; சத்துருவைப் போல

அதை அவரால் அங்கீகரிக்க முடியாதே!

தேவ திட்டம் உருவாக, தோன்றினார்

தெய்வ குமாரனாக; தம் திருவுள்ளம்

காட்டினார் உலகிற்கே.

சத்துருவுக்குத் தெரியும், பிதாவால் பாவத்தை

ஏற்க முடியாது என்று;

ஒரு காலத்தில் இவனும் (லூசிபரும்) அந்த

ஆதிபரனின் புத்திரன்தானே!

மனிதன் பாவமாக இருப்பதால் - அவனைத்

தம்மைப்போல பரிசுத்தமாக்க - தமது

ஒரே பேரான குமாரனை பாவமாக்கினார்,

பரமபிதா.

மீட்கப்பட்டவர்களின் மனங்களும், மீட்பரின்

சாயலானதால், தேவனின் குடும்பம் கிறிஸ்துவுக்குள்

உருவானது; கல்வாரி சிலுவையில் பெற்றெடுத்தார்

நம்மை, நமது ஆத்துமாவின் தந்தை இயேசுகிறிஸ்து.

தம்முடைய காருண்யத்தால், ஒன்றுக்கும் உதவாத,

உண்மை உணராத மனுஷர்களாகிய நம்மை,

இயேசுவானவர் நீதிமான்களாய் ஆக்கும்படி,

தமது சொந்த இரத்தத்தை சிந்தி மீட்டுக்கொண்டார்.

அதிகாரத்தின் பிள்ளைகளாக அழைக்கப்பட்டவர்கள் நாம்;

இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள்;

அடிமைகளல்ல, ஆனாலும் ஆனவமில்லை நம்மில்;

சுவிகாரப்புத்திரர்கள், இருந்தும் சுயபெருமையில்லை;

கிருஸ்துவல்லவா கிரயம் செலுத்தியுள்ளார் சிலுவையிலே.

அந்தகார சக்திகளை அகங்காரமில்லாமல் அடக்கமுடியும்,

நம்முடைய இயேசுவின் நாமத்திலே;
இனியும் பொறுப்பதற்கில்லை தீய சக்திகளே- உங்கள்
அக்கிரமங்களை, எங்கள் தேசத்திலே;
நாங்கள் அமர்ந்திருந்து எங்கள் தேவனின்
இரட்சிப்பை பார்ப்போம்;
கர்த்தரின் கரங்கள் குறுகிப்போகவில்லை.

இயேசுவின் குருதி கொடுத்து மீட்கப்பட்டவர்கள் நாங்கள்;
உறுதியோடு எழும்பி நிற்போம் - எங்கள் தேசத்தை
தேவ கரத்திலே சேர்த்திடவே.

இந்திய சகோதரர்களே!, சகோதரிகளே!
எத்தனை காலங்கள்தான் நாம் பாவத்தின் குழைந்தைகளாக
வாழப்போகின்றோம்;
பரிசுத்தத்தில் தவழ வேண்டாமா, நம் ஆத்தும
நேசரை ஆராதிக்க வேண்டாமா?
ஒளியின் பிள்ளைகளாக வாழவேண்டிய நாம்,
விசுவாசப்பாலிலே (ஆத்தும ஆராதனையில்) பாவ
விசத்தை (சரீர நமஸ்காரங்களை) கலக்கலாமா?
பரிசுத்தமான தேவனை, பாவமாகிப்போன உலகப்
படைப்புகளுக்குத்தான் ஒப்பிடலாமா?
முடிவுவரை விடிவுகாண வழியில்லையே - தொடர்ந்து
தீமையான சக்திகளை நம்பினால்.

தகப்பனும் தாயும் கைவிட்டாலும்,
நம்மை சேர்த்துக்கொள்ளுபவர்,

நமது இரட்சகர் கிருஸ்து பெருமான்;

அவர் நன்மை மட்டும் செய்பவராகவே வாழ்ந்தார், பூமியிலே;

வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார் மோட்சத்திலே.

எதனால்?

தாங்கள் தீமை செய்துவந்தாலும், பிறர் செய்யும்

நன்மையை எதிர்ப்பவர்கள் பாவமான மனிதர்கள்;

அப்படிப்பட்ட, பாவிகளை இரட்சிக்க,

மனந்திருந்தும்படி இப்பொழுதும் அழைக்கின்றார்,

தம் காயப்பட்ட கரங்களை நீட்டியே;

எதற்காக?

நாம் தேவ சாயலில் உருவானதினால்.




படைத்தவர் அறிவார் நம் நிலை முடிவில்;

பரமனின் தீர்ப்பு நிச்சயம் இவ்வுலகில்;

அன்று பெறுவது நமது வாய்ப்பு அல்ல, முடிவு;

## இன்று எடுக்கும் நல்ல தீர்மாணம்,

## இறுதிவரையில் கொடுக்கும் தேவசமாதானம்.